உ
சிவமயம்

News
aperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹு புரட்டாதி மீ ௩ உ (1947 செப்டம்பர் 19 வெள்ளிக்கிழமை) [இல சகூ

# ஐயனர் மகத்துவம்



"பொய்யாச வாவியாலும் பரம்பொருள் முதலும் நல்தம் ஐயனே யோலம்! விண்ணேர்க் காதியே யோலம்! செண்டார் கையனே யோலம்! எங்கள் கடவுளே யோலம்! மெய்யர் மெய்யனே யோலம்! தொல்சீர் வீரனே யோலம்! ஓலம்!!"

என விண்ணுலகுக் கிறைவனுகிய இந்திரனுடைய தேவியாகவுள்ள இந்திராணியாற் போற்றப்பெற்றவராகிய ஐயனரானவர், பரமசிவனுடைய திருவருளானது அந்தஇறைவனுடைய பஞ்சசத்திகளுள் ஒருவராகவிளங்கும் திருமால்கொண்ட மோகினி வடிவத்திற் பதிந்தகாரணத்தினலே அவதரித்துள்ளவர்; ஐயனருக்குக் காரி, கடல்வண்ணன், மாசாத்தர், செண்டாயுதன், பூரணைகேள்வன், புட்கலை மணளன், யோகி, வெள்ளையானையூர்தி ஆரியன், அறத்தைக் காப்போன் ஹரிஹர புத்திரன், முதலான காரணத் திருநாமங்கள் உள்ளன.

"மைக்க நுங்கடன் மேனியும் ஒளுலஃஞ் செக்கர்வேணியும்செண்டுறுகையுமாய் உக்கிபத்துட னேர்மகன்சேர்தலும்...",

என்றதனுல் நீலநிறத் திருமேனியும் செந்நிறமமைந்த சடையும், செண்டாயுததைப் பரித்த திருக்கரமும் ஐயனரின் திபான வடிவமாகக் கொள்ளப்படும். (செண்டு - வளைதடி).

பரமசிவனைப்போன்று ஐயனரும் யோகிகளுக்கு யோக வடிவாயிருந்தும், போகிகளுக்குப் பூரணை புட்கலையென்னும் இரு சத்திகள் இருமருங்கும் பொருந்திய போக வடிவங் கொண்டும் அருள்புரிவர்; மேலும், திருமாலுக்குரிய காவற்றெழிலையும் சிவபிரானுக்குரிய துஷ்டநிக்கிரகத்தையும் அரிகர புத்திரர் செய்தருளுவர் இதனுற்றான் அறத்தைகாப்போன், அரிகர புத்திரன் என்னுந் திருநாமங்கள் இத் தெய்வத்திற்கு வழங்கலாயின.

ஐயனரை உருத்திரனென்று கூறுமிடத்தில், "ஆரணச் சுருதி ஓர்சார் அடலுருத் திரனென் றேத்துங் காரணக் கடவுள்...." எனக் கந்தபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது; இதில் வேதத்துள்ள ஞானகாண்டம் சிவபிரனெருவரே சம்மார உருத்திரரெனக் கூறுமென்றும், கிரியாகாண்டம் மற்றைத் தேவர்களையும் உருத்திரரெனக் கூறுமென்றும், அங்ஙனங் கிரியாகாண்டம் ஐயனரையும் உருத்திரராகக் கூறுமாதலின் "ஆரணச் சுருதி ஓர்சார்" என ஆசாரிய சுவாமிகள் பாடினரென்றும் அறிஞர் பொருள்கொள்வர்; "அடல்" என்பதற்கு இங்கே சங்காரமென்னுது வலிமையெனப் பொருள் கொள்வர் கற்றறிந்தோர்; ஐயனருக்கு வெள்ளையானை குதிரையென வாகனங்கள் இரண்டென்றும், அடியார்க் கருள் புரிய எழுந்தருளுங்கால் வெள்ளையானையை வாகனமாகக் கொள்வரென்றும், அடியார் பொருட்டுத் துஷ்டரை யழித்தற்குப் புறப்படும் போது குதிரையை வாகனமாகக் கொள்ளுவரென்றுங் கூறுவர்,

தம் திருவருளால் அவதரித்த ஐயனருக்குப் பரமபதியே அரிகர புத்திரன் என நாமம் புனைந்து பல வரங்களையருளி, ஐயன் புவனமென ஒரு பதவியையும் உடனே ஆக்கி அப்புவனத்திலுள்ளார்க்கும், ஏனைய தேவர் முனிவர் முதலானேர்க்கும் தலைவராய் இருந்து அவர்களெல்லாரும் போற்ற அவர்களைப் பாதுகாக்கும் அதிகாரத்தையும் கொடுத்தருளினர்; அரிகரபுத்திரர் அப்புவனத்திற்றனே இருந்துகொண்டு சிவ ஆக்ஞைப்படி சகல உயிர்களையும் பாதுகாத்தருளுவர்; ஐயனர்க்குப் பரிசனராயுள்ளார் பூதகணத்தவரெனவும் அவர்எங்கும் வியாபகமாகி விண்ணுலக வாசிகள் மண்ணுலக வாசிகள் தம்மை வழிபட அவர்கட்கு வேண்டிய வரங்களையருளுவரெனவுங் கந்தபுராணங்கூறுகின்றது.

## ஐயனர் வழிபாடு

அரிக்கும் அரனுக்கும் புதல்வரென்ற காரணத்தினற்போலும், ஐயனரை வைஷ்ணவர்களும் சைவர்களும் பேதம்பாராட்டாது பொதுமை பாராட்டித் தந்தெய்வம் எந்தெய்வமென்று வழிபடுகின்றனர்கள்; வட இந்தியாவிலும ஐயனர் வழிபாடு உண்டென்பது அறியக் கிடக்கின்றது, ஆனல் அங்கே ஐயனருடைய யோக வடிவமே வைத்துப் பூசிக்கப்படுகின்றதென்பது வட இந்தியாவில் ஆக்கப்பட்டுஇங்குவரும் ஐயனர்உருவங்களையும் சித்திரங்களையுங் கொண்டு அநுமானிக்கலாகும். [இந்த வியாசத்தின் முகப்பிலுள்ள சித்திரம் இங்கு ஆக்கப்பட்டதெனினும், இது ஐயனரை யோக வடிவிற் காட்டுவதாகும்.] தென்னிந்தியாவிலே பெரும்பான்மையும் ஐயனர் பூரணை புட்கலையென்னு மிருசத்திகளோடு கூடிய போக மூர்த்தியாகவும், சிற்சில இடங்களிலே யோகமூர்த்தியாகவும், வைத்துப் பூசிக்கப்படுவரென அறிந்தோர் சொல்லக் கேட்டிருக்கிறேம்; தென்னட்டி [illegible]

## பிரார்த்தனை

உடைய நாதனே போற்றி நின்னலாற் பற்று மற்றெனக் காவதொன்றினி
உடைய னேபணி போற்றி யும்பரார் தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னயினேன் போற்றி யென்பெருங் கருணையாளனே போற்றியென்னை
அடிய னக்கினய் போற்றி ஆதியும் அந்த மாயினய் போற்றி யப்பனே. [நின்

—மணிவாசகர்

## அமரகவி பாரதி

### பிரெஞ்சு தேசாதிபதியின் புகழுரை

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் ஓர் அமரகவி. உலகிலுள்ள சகல நாடுகளும் சுதந்திரம் பெற்று விளங்க வேண்டும் என்ற எண்ணமே அவர் மனதில் வேரூன்றியிருந்தது. அந்த எண்ணம் சாதி, வகுப்பு, மதங்களைக் கடந்தது. இக்கவிஞர் தமது தாய் நாட்டின்சுதந்திரத்துக்காகவேதமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்தார் என்பதை அவருடைய நூல்களிலிருந்து நான் அறிகிறேன். இந்தியா சுதந்திரமடைந்திருக்கும் இச்சமயத்தில்—பிரெஞ்சு இந்தியர் சுயாட்சி பெறப்போகும் இத் தருணத்தில்—இம் மகாகவியைக் கௌரவிப்பது பெரிதும் பொருத்தமானதாகும் என புதுச்சேரி பாரதிமந்திரத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் படத்தைச் சென்றவாரம் பிரெஞ்சு இந்தியத் தேசாதிபதி எம். பரோன் திறந்து வைக்கையில் கூறினர்.

கவிஞ புதுவையில் தங்கியிருந்தபோது அவருக்குஉதவிசெய்தகாலஞ் சென்ற திரு. பொன்னு முருகேச முதலியாரின் குமாரர் திரு. பி. எம். ராஜபாதர் முதலியார் பேசுகையில், கவிஞரின் அஞ்ஞாத வாசத்தில தஞ் சமளித்த பிரெஞ்சு குடியரசு அரசாங்கத்தின் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கும் மே த. பரோன் கவிஞரது படத்தைத் திறந்துவைத்தது வெகு பொருத்தமென்று கூறினர்,

புதுவையிலுள்ள முக்கியமான தெருவொன்றுக்கு 'பாரதி ரோட்' என்ற பெயரிடப்படுமென மே. த. தேசாதிபதி அறிவித்தார்.

## இன்னும் 2 வருஷமா?

### மிஸ்ரர் சேனநாயக்காவின் ஆயுள்

தான், அடுத்த பிப்ரவரி மாதம் வரை உயிருடன் இருந்தால், அந்த மாதத்தின் முதற்பகுதியில் இலங்கைக்குப் பூரண சுதந்திரம் பெற்றே கொடுப்பதாக மிஸ்ரர் சேனநாயக்கா சென்றவாரம் பாணந்துறையில் நிகழ்ந்த ஓர் கூட்டத்திற் கூறினர். அவர் இடதுசாரிகளின் கொள்கையைக் கண்டித்துப் பின்வருமாறு கூறினர்;

"இந்த இடதுசாரிகள் இலங்கையை ருஷியாவுக்கு விற்க முயற்சிக்கிறார்கள்; இந்த இலங்கையை, ருஷியாவின் அடிமை நாடாக்குதற்கும், இங்கே சம்மட்டி — சத்தகக் கொடியை ஏற்றுதற்கும் நான் ஒரு போதும் விடமாட்டேன் என்பதை இடதுசாரிகள் உணர்ந்து, அரசியல் வாழ்க்கையி லிருந்து என்னைத் துரத்த முயற்சி செய்கிறார்கள்.

"என்னுடைய வாழ்க்கையிலே அரைப்பாகம் தேச சேவையிலேயே ஈடுபட்டிருக்கிறது. இன்னும் இரண்டு வருஷ காலத்துக்கு உயிருடன் இருந்து அச்சேவையைத் தொடர்ந்து செய்வேனே என்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.

"என்னுடன் ஒத்துழைக்கக் கூடியவர்களையே தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்து அனுப்பவேண்டுமென்று வாக்காளர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்கள் ஒத்துழைத்தால் எங்கள் ஸ்ரீலங்காவின் கொடியை வருகிற பிப்ரவரி மாசத்தில் நான் கெம்பீரமாகப் பறக்க விடுவேன்".

# கீதையின் உபதேசம்

## உலக முன்னேற்றத்துக்கு வழி

சென்ற ஞாயிற்றுக்கிழமை, வெள்ளவத்தை ஸ்ரீ ராமக்கிருஷ்ண மடத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி ஸ்ரீஜ. உத் வி வி. கிரியின் தலைமையில் கொண்டாடப்பட்டது. அன்று நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் பல மதங்களைச் சேர்ந்த பிரமுகர்கள் பேசினர்.

உலகிலுள்ள மதங்கள் அனைத்தும் அன்பையே போதிப்பன. சேவையையே லட்சியமாகக் கொண்டன. அந்த மகத்தான போதனைகளையே கிருஷ்ண பரமாத்மா துவாபர யுகத்திலே, குரு க்ஷேத்திரத்தில் காண்டீபனுக்குத் தேர்ச்சாரதியாக அமர்ந்து உபதேசித்தருளினர் என்று ஸ்ரீஜ. உத் [illegible] மேலும் பேசியதாவது:-

கீதை காட்டும் உயரிய வழியைக் கடைப்பிடிப்பது உலக மக்களுக்கு இன்று இன்றியமையாததாகும். உலகம இப்போதுபோல, எப்போதாவது அந்தகாரத்தில் ஆழ்ந்திருக்கவில்லை. உலக அரசியல் தலைவர்கள் கீதையைப் படித்து அதன் போதனைகளை நடைமுறையிற் கைக்கொள்ளுவரானல், இந்த உலகத்திலே இத்தகைய அக்கிரமங்கள் நிகழமாட்டா; நேர்மாருக இது பூலோக சொர்க்கமாகத் திகழும்."

இதன்பின்பேசிய மிஸ்ரர் ஸ்ரீ ஜே. பத்மநாய, யுத்தம் என்ற பெயரால் உலக மக்கள் ஒருவரை யொருவர் கொன்றுகுவிக்கும் "நாகரிக"த்தைக் கண்டித்துப் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞூ
புரட்டாதிமீ ௩ உ வெள்ளிக்கிழமை

## இலவசக்கல்வியின் கதி

இலங்கைச் சிறுவர் சிறுமியர்க்கு இலவசக்கல்வியை ஊட்டுதற்கு மூலகாரணரா யிருந்த கல்வி மந்திரியாராகிய திரு. C. W. W. கன்னங்கரா அவர்கள், சென்றவாரம் நேர்ந்த பாராளு மன்றப் பிரதிநிதித் தேர்தலிலே பிரதிகூலமடைந்து விட்டபடியினல், இந்த இலங்கயில் இலவசக்கல்வி இனிமேல் இல்லாதொழிந்துவிடுமோ என்ற ஏக்கம் இலங்கையிலுள்ள பெற்ருருட் பலரிடத்துக் காணப்படுகின்றது. திரு கன்னங்கரா இலவசக் கல்வியை இலங்கையிலே நாட்டுவதற்குப் பட்ட சிரமங் கொஞ்சமல்லஎன்பது கல்வியபிமானமுடைய மக்களும், தம் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூட வேதனமின்றிக் கல்வி யூட்ட இயலாத வறிய பெற்ருரும் நன்கு அறிந்த விஷயம்; திரு. கன்னங்கராவின் நோக்கம் மிக மேலானதெனக் கண்டும், கழிந்த அரசாங்கசபைப் பிரதிநிதிகள் மந்திரிமாரென்னு மிவர்களுட் பலரும், அந்நியமதப் பிரசாரஞ் செய்வோரும், இன்னுஞ் சில கட்சியினரும் இலவசக் கல்விக்கு மாருகவே நின்றனர்; இவர்களுட் பலர் சுயநலங் கருதியோ இல்லையேல் வேறு யாதும் அந்தரங்க காரணம் பற்றியோ மாருக நின்றனரென்பதை மறுக்க முடியாது. அக் காரணங்களையும் நோக்கங்களையும் இப்பொழுது எடுத்துக் காட்டுதலினல் நன்மையில்லையாகும்.

இன்னெரு சாரார் இலவசக் கல்வி வேண்டியதுதான் என்றும், ஆனற் குறித்த கல்வி மந்திரியின் முயற்சியால் வந்த இலவசக்கல்வி வரைவற்றதென்றும், இந்த முறையில் இலவசக்கல்வி யூட்டிவரின் அரசியல் வருவாய் செலவிற்குப் போதாமல் வருமென்றும், இலவசக்கல்வி முறையிலே பல திருத்தங்கள் செய்தல் வேண்டுமென்றும் அபிப்பிராயப் பட்டனர்; இந்தப் பிந்திய சாரார் கொள்கை நியாயமற்றதெனச் சொல்லுதல் முறையல்ல; இன்னுஞ் சிலர் தனவந்தர்களுடைய பிள்ளைகள் பள்ளிக்கூட வேதனங் கொடுத்தும், ஏழைப்பிள்ளைகள் பள்ளிக்கூட வேதன மின்றி இலவசக் கல்வியைப் பயிலவும் ஒழுங்குகளைச் செய்தலே உத்தமமென எண்ணுகின்ருர்; இவர்களுடைய எண்ணமும் நல்லதேயாகும்; ஆனல், செல்வப் பெற்ருர்கள் வறிய பெற்ருர்களென்ற உண்மையைக் கண்டு பிடித்தல்தான் இவ்விஷயத்திலே கஷ்டமாகும்; இலவசக் கல்வியென்றவுடனே போதிய செல்வர்களும் ஏழைப் பெற்றேரென நடிக்கத் தலைப்படுவர்.

கல்வி மந்திரியாகிய திரு. கன்னங்கரா அளவிற்கு மேற்பட்ட சமயாபிமான முள்ளவ ரென்பதும், மற்றைச் சமயத்தவர்கள் தம் சமயத்தைப் பரப்புதற்கு இடையூருகவுள்ளவ ரென்பதும் அந்நியசமய மக்கள் சிலர் கொண்டுள்ள எண்ண மெனலாம்; திரு. கன்னங்கரா சமயாபிமானம் பெரிது முடையவ ரென்பது நிசம்; அப்படியான அபிமானம் எச்சமய வாதிகளிடத்திருப்பினும் நன்மையே யாகும்; ஏனைய சமய வாதிகட்குத் திரு. கன்னங்கரா இடையூருக நிற்கின்ருரென்பதுபொருந்தாக் கூற்றும்; ஒவ்வொரு சமயத்துப் பிள்ளைகளும் தத்தம் மார்க்கத்துக் குரிய கல்வியைக் கற்கவேண்டு மென்பதும், மற்றைச் சமயத்தவர்கள் ஒரு சமயத்துப் பிள்ளைகளைத்தஞ்சமயத்திற்கு இழுக்க விடவொண்ணுதென்பதுமே திரு. கன்னங்கராவின் கொள்கையாகும்; இதனை அறிவுடையோ ரெவரும் தவருன கொள்கையென நினைக்க மாட்டார்கள். தன் சமயநூலைக் கற்றறிந்து அதன்படி ஒழுகாதவன் பிற்காலத்திலே ஒருபோதும் சிறந்த இலங்கை மகனுக வாழமாட்டான் என்பது திரு. கன்னங்கரா கொண்ட சரியான கொள்கையாகும்.

இப்படிச் சில அந்தரங்க காரணம்பற்றியேஇப்போதுதிருகன்னங்கரா தோல்வியடையலாயினரென எண்ணக் கிடக்கின்றது; திரு. கன்னங்கரா இந்த வேளையில் தோல்வியுற்ருரெனினும், அவர் கல்வி விஷயமாக இலங்கை மக்களுக்குச் செய்த உதவியை மறப்பவர்கள் நன்றிகெட்டவராவர்; தேர்தற் காலத்திலே பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியரும், பெற்ருரும், கல்வியபிமானம் பூண்டவர்களும் பெருஞ் சிரமப்பட்டு உழைத்தார்களெனவும், அவர் தோல்வியுற்றதையறிந்து கண்ணீர் விட்டார்களெனவும் கொழும்புத் தினசரிப் பத்திரிகைகளிற் காணக் கிடந்தன; அச்செயலும் கல்வி விஷயமாகத் திரு. கன்னங்கரா உழைத்த உழைப்பையே காட்டி நிற்கின்றது; பிரதானியும் கால வித்தியாசத்தினல் அப்பிரதானியாகின்ருனென்பது பஞ்சதந்திரம்; தேர்தற் பொருட்டு முற்பட்டு நின்று சிறந்தோர் சிலர் இப்பொழுது அபஜெய முற்றமையும் இவ் வாக்கியத்திற்குத் திருட்டாந்தமாகும். திரு. கன்னங்கரா போன்ற ஒரு கல்வியபிமானி இந்த யாழ்ப்பாணப் பெரும்பிரிவில் எந்தத் தொகுதிக்கு அபேட்சகராக முற்பட்டு நிற்பினும், யாழ்ப்பாண மக்கள் அவரை எதிரிடையின்றி ஆதரித்துத் தங்கள் பிரதிநிதியாகப் பாராளு மன்றத்திற்கு அனுப்பி வைப்பார்களென்று திடமாகச் சொல்லலாம். ஏன்? இந்த யாழ்ப்பாணத்துள்ள மக்கள்தாம் கல்வியின் அருமை பெருமைகளை உள்ளபடி [illegible] என்ற காரண[illegible]

இனி, இலவசக்கல்வி விஷயமாகச் சொல்லுமிடத்து, திரு. கன்னங்கராவின் இப்போதைய வீழ்ச்சியோடு இலவசக்கல்வியும் நின்றுவிடு மென்று அஞ்சவொண்ணுது; சிலகாலம் இப்பொழுதுள்ளபடியே நடைபெற்றுக் காலகதியில் ஏற்றவகையில் திருத்தங்கள் செய்யப்படுமெனத் தான் எவரும் எதிர்பார்த்திருத்தல் வேண்டும்; புதிய பாராளு மன்றத்திற் சேர்பவர்களுள்ளும் அநேகர் கல்வியறிவும் கல்வியில் அபிமான முடையவர்களாவர்; ஆதலால் இலங்கைமக்கள் இல[illegible]யமாக மனத்[illegible]ருதொழிக.

# உலகம் பலவிதக் கதை

(முற்றெடர்—31)

### "பிரிந்தவர் கூடிடிற் பேசவும் வேண்டுமோ"

இவைகளெல்லாம் நிகழ்ந்தஅடுத்த நாள் அதிகாலையில், இவர்கள் ஏறிச் சென்ற கப்பல் சிங்கப்பூர்த் துறை முகத்தைப் போய்ச் சேர்ந்தது; கொழும்பிலிருந்து புறப்பட்ட கப்பல், அத்தினத்தில் அங்கே வந்துசேருமென முந்தியே அறிந்தவர்களாகிய மலாய்நாட்டில் வசிக்கும் யாழ்ப்பாண மக்களுட் பலர், தங்கள் மனைவிமக்கள் பெற்ருர் சுற்றத்தாரை வரவேற்பதற்காக, கப்பல் போய்ச் சேருவதற்குச் சிலமணிநேரம் முந்தியே துறைமுகத்தில் ஆயத்தமாக வந்து நின்ருர்கள்; கண்ணகியம்மையின் மகனுகிய சிவகுருநாதனும் மோட்டோரதத்துடன் அப்போது அங்கே வந்து நின்ருன்; தாயுந் தங்கையும் பாக்கியலட்சுமியும் இராமனும் கப்பலைவிட்டு இறங்குதலும் சிவகுருநாதன் அவர்களை ஆநந்தத்தோடு வரவேற்ருன்: சிவகுருநாதனைக் கண்ட மாத்திரத்தே தாய்க்குந் தங்கைக்கும் உண்டான சந்தோஷத்தையும், தாயையும் தங்கையையுங் கண்ட மாத்திரத்தே சிவகுருநாதனுக்குண்டான ஆநந்தத்தையும் இப்படிப் பட்டதெனச் சொல்லமுடியாது; "பிரிந்தவர் கூடிடிற் பேசவும்வேண்டுமோ"! என்றல்லவா சொல்லப்பட்டிருக்கின்றது; சிவகுருநாதன்விவேகி, சன்மார்க்கனென்பது முந்தியேசொல்லப்பட்டது: பாக்கியலட்சுமி இன்னுளென அவன் அந்தநேரத்தில் அறிந்திலனெனினும், தன் தாயையும் தங்கையையும் துணையாகக்கொண்டு பிரயாணம் வந்த ஒரு பெண் என்பதை யூகித்துப் பாக்கியலட்சுமியையும் தன்னுடைய இன்னெரு தங்கையெனப் பாவித்து அன்புடன் உபசரித்தான்: பாக்கியலட்சுமியும் அப்படியே அவனை மதித்து ஊடாடினுள்; மூவரையும் மோட்டாரதத்தில் ஏறும்படி சிவகுருநாதன் சொல்ல, "தம்பி, அங்கே வருகிருர் எங்கள் சின்னத் தங்கைச்சியின் புருஷன்" என்று சற்றுப் பிந்தி இறங்கிவந்த விஜயரத்தினத்தைக் கண்ணகியம்மை காட்டுதலும், சிவகுருநாதன் உடனே விஜயரத்தினத்தை யெதிர்கொண்டு மகிழ்ச்சியோடு இரதத்தண்டை அழைத்து வந்தான். இரதம் பெரியதாதலின் பின்னுசனத்திற் பெண்கள் மூவருமிருக்க, முன்னுசனத்தில் விஜயரத்தினமும் இராமனும் இருப்ப, தன்னுசனத்திலிருந்து சிவகுருநாதனே இரதத்தைச் செலுத்தித் தன் வாசஸ்தானத்திற்குக் கொண்டு சென்ருன்; அவர்கள் வரவை யுத்தேசித்து, முன்னதாகவே ஸ்நாநம காலைப்போசனம் முதலியவற்றிற்காகிய ஒழுங்குகளை யெல்லாம், கிருஷ்ணன் என்னும் பணியாளன் சிவகுருநாதனுடைய வாசஸ்தானத்தில் ஆயத்தஞ் செய்திருந்தான், எல்லோரும் ஸ்நாநம் முதலியன முடித்துக் காலையுணவு அருந்தினர். சிவகுருநாதனுடைய வாசஸ்தானமாகிய வீடு விசாலமானது; பல அறைகளோடு கூடியது; தண்ணீர்ச் சௌகரியம் முதலியனவுடையது; விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் வசிப்பதற்கான இடம், தன் தாய் சகோதரி யிருவரும் வசித்தற்கான இடம், தனக்காகிய இடம் எல்லாம் தன் வீட்டிலே வகுத்து வைத்தான்: விஜயரத்தினமும் பாக்கிய இலட்சுமியும் தங்களுக்குரிய அறையில் இருப்ப, சிவகுருநாதன் தன் சகோதரியும தாயுமிருக்கும் அறையிற்போய், பாக்கியலட்சுமி விஜயரத்தின மென்னு மிவர்களுடைய வரலாற்றைச் சொல்லும்படி தாயைக் கேட்டான்; தாய் முதல் விஜயரத்தினத்தின் வரலாற்றையும் பின்னர்ப் பாக்கியலட்சுமியின் வரலாற்றையும், பாக்கியலட்சுமி தங்களுடன் பிரயாணம் புறப்பட்டு வந்த நோக்கத்தையும், பாக்கியலட்சுமிக்கும் விஜயரத்தினத்துக்கும் கப்பலிலே வரும்போது விவாகம் நடந்த வரலாற்றையும் விபரமாகச் சொன்னுள். கேட்ட சிவகுருநாதன் விதியின் செயலையெண்ணி அற்புதமடைந்தான்: மேலும் மகனுடைய க்ஷேமலாபங்களைத்தாய் விசாரித்தறிய, மகனும் தங்கள்சொந்த ஊரிலுள்ளசுற்றமித்திரருடையக்ஷேமலாபங்களை விசாரித்தறிந்தான்.

### "சஞ்சலம் வேண்டாம் தங்காய்"

இங்ஙனமாக, கண்ணகியம்மை மகனைப் பார்த்து, "தம்பீ, உங்கள் மைத்துனன் என் அருமை மருமகன் நமசிவாயத்தைப்பற்றி ஏதும் அறிந்தாயா? என் தமயனும் மச்சாளும் எந்த நேரமும் கண்ணீருங் கம்பலையுமாகவேயிருக்கிருர்கள்; உன் தங்கைக்கும் எனக்கும் அந்தப் பிள்ளையையிட்டுத் தீராக் கவலைதான்; மகனே, இவைகளைப்பற்றி யோசிக்கலாமென்றுதான் நான் ஊரிலிருந்துகொண்டு உன்னை அங்கே வரும்படி கடிதம் எழுதினேன்; இங்கே உத்தியோக கடமையதிகமென்று நீயும் வர மறுத்துவிட்டாய்: உங்கள் மாமனுர் தம்முடைய மகனையிட்டு இரங்குவதைக் காட்டிலும், உன் தங்கை பல வருடமாகக்குமரிருக்கிருளேயென்றுஅதிக கவலைப்படுகிருர்; உன் தங்கைக்கு வேறு எங்கேனும் மாப்பிள்ளைபேசித் தாமே கல்யாணஞ் செய்துவைப்பதாகவும் அண்ணன் எனக்குச் சொன்னுர்; அது எனக்கு விருப்பமில்லை: நான்தான் என்ன செய்யலாம்; விதியின்வழி நடக்குமென்று ஒரு அளவிற்குஉடன்பட்டாலும்,உன்னுடைய இந்தத் தங்கைச்சி எள்ளளவுஞ் சம்மதிக்கமாட்டாளாம்; இப்பொழுதும் மகனே, உன்னைவந்து பார்ப்பதோடு இவைகளைப்பற்றி உன்னுடன் யோசிக்கவும் நமசிவாயத்தைப்பற்றி இன்னமும் முயற்சிசெய்து ஏதும் அறியலாமென்றும் எண்ணியே இங்கே புறப்பட்டு வந்தோம்: அந்தப் பிள்ளையைத் தேடிக் காணமுடியாவிட்டால் உன் தங்கை விஷயமாக என்னசெய்வதென்பதைப்பற்றிஎனக்கொன்றும் புலப்படவில்லை; நான் சொல்லவேண்டிய புத்தியெல்லாஞ் சொல்லிவிட்டேன்: ஏதோ நீயும் உன் தங்கைக்கு ஆகவேண்டிய புத்திகளைச் சொல்லிப் பார்" என்று கவலையோடு சொன்னுள்; பாக்கியலட்சுமியின் முகம் அந்த நேரத்தில் வாட்டமுற்றது; தாய் சொன்னவற்றை எல்லாமகேட்டபின் சிவகுருநாதன் சற்று நேரம் யோசித்தபடியிருந்து பெருமூச்சுவிட்டுத் தன் தாயைப் பரிவுடன் பார்த்து "அம்மா, ஆண்டவன் கிருபையாலும் உங்கள் ஆசியினுலும், என் அருமைத் தங்கைச்சியின் அன்பினுலும்,நான்இப்

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்வி முறை

## அதன் எதிர்காலம் என்ன?

— (" ஸ்ரீதரன் ") —

மத்துகமாத் தேர்தலில் இதுவரை கல்வி மந்திரியாக விருந்த மிஸ்ரர் கன்னங்கரா தோற்றுவிட்டார். அரசியல் விஷயமாக மிஸ்ரர் கன்னங்கரா பல பிழைகள் செய்திருக்கலாம்; ஆனல் அப்பிழைகளின் பொருட்டு, அவர் கல்வி விஷயமாக இலங்கை மக்களுக்குச் செய்துள்ள சேவையை எவரும் மறக்க முடியாது. இலங்கையிலே இலவசக் கல்வித் திட்டத்தின் மூலகாரணர் அவரே என்பதையும், அவரால் கல்வித் துறையில் சாஸ்வதமான நன்மை இலங்கைக்குக் கிடைத்திருக்கிறது என்பதையும் இப்போதில்லாவிட்டாலும், ஓர் காலத்தில் இலங்கை மக்கள் உணராதிருக்கமாட்டார்கள்,

மிஸார் கன்னங்கராவின்தோல்வியினல், இலவசக் கல்வித் திட்டமும் நாசமாகிவிடுமா? இந்தக் கேள்வி இன்று இலங்கையில் உள்ள எல்லார் மனத்திலும் எழுந்திருக்கின்றது ஆனல் இப்போது பாராளுமன்றத்தங்கத்தவராகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் எந்தக் கொள்கைகளினுல் வெற்றிபெற்ருர்கள் என்பதனையும் அவர்கள் இனியும் பொதுமக்களை ஏமாற்றமுடியாது என்பதனையும் உற்று நோக்கும்போது, இக் கல்வித் திட்டம் கைவிடப்படுமென்று அஞ்சவேண்டியதே யில்லை, இத்திட்டம் கைவிடப்படுமானல், இப்போது பாராளுமன்றத்தங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களும் கைவிடப்படுவதோடு அமையாது, அவர்கள் பொதுஜன ஆத்திரத்துக்கும் கோபத்துக்கும் நிச்சயமாக இலக்காகித் தேசப்பிரஷ்டம் செய்யப்படவுங் கூடும்.

இலவசக்கல்விமுறை நல்லது: ஆனல் இப்போதுள்ள முறையின்படி செல்வத்துட் புரளுகின்றவர்களும், நித்திய தரித்திரத்தில் உழல்பவர்களும் ஒரே நிலையில் வைத்தெண்ணப்படுகிருர்கள். மாதந்தோறும் ஆயிரக்கணக்கில் வேதனம் பெறும் சிவில் உத்தியோகத்தர், 'பிளாக் மார்க்கெற்' வியாபாரத்தில் லட்சக்கணக்கில் சம்பாதித்தவர்கள், செல்வத்துட் புரண்டு அச்செல்வத்தை இன்னது செய்வதென்றறியாது தயங்கும் சோம்பேறிகள் என்பவர்களின் பிள்ளைகளுக்கும், கஞ்சி வரதப்பா என்ருல் எஙகே வரதப்பா என்று ஏங்கும் வறியவர் பிள்ளைகளுக்கும் ஒரேதன்மையில் வைத்து இலவசக் கல்வி யூட்டப்படுகின்றது. இது அநியாயம்; இதனல் அதிக நன்மை பெறுவோர் செல்வரேயன்றி ஏழைகளும் நடுத்தர வகுப்பினரும் அல்ல. இதன் பயனக, கோடிக் கணக்கான ரூபாய்கள் ஆண்டுதோறும் செலவாகின்றன. இந்த அநியாயமுறை தவிர்க்கப்படுதல் வேண்டும் வருமானவரி கொடுப்பவரின் பிள்ளைகள் பள்ளிக்கூட வேதனம் கொடுக்க வேண்டுமென்று சட்டம் இயற்றப்படல் வேண்டும். வருஷம் 2000 ரூபாவுக்குள் உழைப்பவரின் பிள்ளைகளுக்கு மாத்திரமே இலவசக்கல்வி யூட்டப்படல் வேண்டும். இலவசக்கல்வி மாத்திரமன்றி, இந்தப் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூட உபகரணங்கள், மத்தியானப் போசனம் என்பனவும், இலவசமாக அளிக்கப்படல் வேண்டும். இப்போது அளிக்கப்படும் மத்தியானப் போசனமுறை ஜனங்களைக் கேலி செய்வதைப்போன்றது. உண்மையிற் புஷ்டியான, ருசியான உணவு பிள்ளைகளுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

செல்வர்களின் பிள்ளைகளுக்கு வேதனம் விதித்து, மற்றும் பிள்ளைகளுக்கு இலவசக்கல்வி யளிக்கும் முறையை இனி வரும் பாராளுமன்றம் அநுட்டிக்குமானல், இப்போதுள்ள பட்சபாதகத் திட்டத்தினல் விரயமாக்கப்படும் பணத்தில் ஓர் பெரும்பகுதி மிச்சமாகும். செல்வர்கள், முதலாளிமார் என்பவர்களின் செல்வாக்கும் அதிகாரமும் மலையேறிவிட்டது பாராளுமன்றத்தவர்கள், அவர்களுக்குப் "பந்தம் பிடிக்கும்" காலமும் போய்விட்டது. ஆகவே, ஜனப்பிரதிநிதிகளாயுள்ளார், தம்மைத் தெரிந்தனுப்பிய பொதுஜனங்களின் நன்மையை முன்னிட்டு இலவசக்கல்வித் திட்டத்தில். மேலே காட்டிய விதமாக மாற்றங்கள் செய்து, இந்நாட்டு மக்களுக்கு உண்மையான நன்மைகள் செய்யப்போகின்றனரா? அல்லது பொதுமக்களின் ஆத்திரத்துக்கும் கோபத்துக்கும் ஆளாகப் போகின்றனரா?

## தற்காலிக பதவிநிறுத்தம்

புங்குடுதீவு மேற்கு கிராமவிதானையார் திரு. ஆ. ச. இராசேந்திரம் அவர்கள் தீவுப்பகுதிப் பாராளுமன்றத் தேர்தலில் தமது மைத்துனர் திரு. க. அம்பலவாணருக்கு வாக்களிக்கும்படி வாக்காளர்களைப் பகிரங்கமாகத் தூண்டினரென முறைப்பாடு செய்யப்பட்டதின்பேரில் வடமாகாண அரசாட்சி ஏசண்டர் விதானையைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைத்திருக்கிருர். அவரின் கடமையை ஷியூர் உடையார் பார்த்துவருகிருர்.

நநி

# முறைப்பாடு?

## பாகிஸ்தான்-இந்தியா பிணக்கு

ஐக்கியதேச ஸதாபனத்துப் பொதுச் சபையின் கூட்டத்திற் பங்குபற்ற பாகிஸ்தான் பிரதிநிதிகளும் நியூயோர்க் நகரம் சென்றிருக்கின்றனர். அவர்களில் ஒருவரான அப்துல் சத்தார் பீர்ஸதா என்பவர் இந்தியா — பாகிஸ்தான் என்னும் இருநாடுகளுக்குமிடையேயுள்ள உறவு நல்லாயில்லை என்றும் இந்தியாவிலே சிறுபான்மையினராகவுள்ள முஸ்லீம்கள் மிகவும் கொடுமையாக நடாத்தப்படுகின்றனரென்றும் கூறினர். மேலும் அவர் கூறியதாவது:

"இந்தியாவிலே முஸ்லீம்களை நடத்தி வரும் முறை எனக்குப் பிடிக்கவில்லை. இந்தியா இப்படியே இனியும் நடத்தி வருமானல், அந்நாட்டுக்கு விரோதமாக பாகிஸ்தான் இந்த ஐக்கியதேச ஸ்தாபனத்திலே ஓர்முறையீடு கொண்டுவரவும் ஏதுவுண்டாகலாம்."

## இலங்கையின் அரிசிநிலை

சிங்கப்பூரில் அவசரகால உணவுச்சபைக்குச் சென்று திரும்பியுள்ள இலங்கை உணவுப்பகுதி யதிகாரி ஸ்ரீ கே. ஆழ்வாப்பிள்ளை இலங்கைக்கு அடுத்த ஆண்டில் அதிக அரிசி கிடைக்குமென்று தாம் நம்புவதாகக் கூறினர்.

இலங்கையின் அரிசி இருப்பு நிலைமை திருப்திகரமாக இருக்கிறதென்று ஸ்ரீ ஆழ்வாப்பிள்ளை கருதுகிருர்.

## 50 லட்சம் ரூபா

இப்போது இலங்கையில் நிகழும் தேர்தல்களின்பொருட்டு அரசாங்கத்துக்கு 50 லட்சம் ரூபா செலவு ஏற்படுமென்று கணிக்கப்பட்டிருக்கிறது, சென்றவாரம் கூடிய மந்திரசபை இத்தொகையில் 40 லட்சம் ரூபாவை இப்போதைக்குஅநுமதித்திருக்கிறது.

# இனி நடப்பது யாது?

## பரஸ்பரம் முரண்பாட்டுப் பிரசாரம்

மிஸ்ரர் பண்டாரநாயக்காவைத் தலைவராகக் கொண்ட சிங்கள மகாசபையின் "சிங்கள பலய" என்னும் பத்திரிகை ஐக்கிய தேசீயக் கட்சியின் போக்கில் வெறுப்புக்கொண் டிருப்பதாகத் தெரிகிறது. ஐக்கிய தேசீயக்கட்சி பொதுஜனங்களுக்கிடையே அவ்வளவு செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை யென்றும், பொதுசனங்கள் அதனைச் சந்தேகத்துடன் நோக்குகின்றனரென்றும், அப்படி அவர்கள் நோக்குவதற்குக் காரணங்கள் உள என்றும் மேற்படி பத்திரிகை கூறுகிறது.

இன்னும் ஐ. தே. கட்சியின் பிரசாரகர்த்தா மிஸ்ரர் கொத்தலாவலையின் முயற்சிகளினல் பொதுஜனங்கள் அதனை ஓர் முதலாளிக் கட்சி என்று நினைக்கிருர்கள் என்றும், அதன் பயனக அவர்கள் இடதுசாரிகள் கூறும் மொழிகளுக்குச் செவிசாய்த்து அவர்கள் வலையில் வீழ்ந்துவிடுகிருர்கள் என்றும் "சிஹல பலய" கூறி இப்போதுள்ள அரசியல் தடுமாற்றத்திலிருந்தும் நீங்கவேண்டுமானல், ஐ. தே. கட்சியைப் புநருத்தாரணம் செய்யவேண்டும் என்று பின் வருமாறு எழுதுகிறது:

"ஐ. தே. கட்சியைப் புநருத்தாரணம் செய்வது முடியாவிட்டால், இலங்கையின் சுபிட்சத்தை விரும்பும் மக்கள் செய்ய வேண்டியது ஒரேயொரு கர்மம்தான். எல்லார்க்கும் உவந்த, நேசபான்மையுடைய, பரந்தநோக்குமுடையஒருவரை— அவர் ஐ. தே. கட்சியினராயினும் சரி. வெளியானவராயினும் சரி— தலைவராக்கி அவர் தலைமையில் ஓர் புதிய கட்சியை உண்டாக்கவேண்டும்."

மேற்படி பத்திரிகையின் கூற்று ஐ.தே. கட்சிக்குள்ளேயே பிளவு தோன்றியிருப்பதைக் காட்டுகின்றது எனவும், மிஸ்ரர் பண்டாரநாயக்கா மிஸ்ரர் சேனநாயக்காவை விட்டு நீங்கி ஓர்புதியகட்சியை ஸ்தாபித்து அதன்மூலமாகப் பிரதம மந்திரிப் பதவியை அடைய எண்ணங் கொண்டிருக்கிருர் என்பதைக் காட்டுகிறது என்றும் ஓர்சாரார் கூறுவர்,

ஆனல், ஐ. தே. கட்சியின் பிரசாரப் பத்திரிகையின் கூற்றுப்படி அப்படியான பிளவு ஒன்றும் ஐ தே கட்சியில் ஏற்படமாட்டாதென்றும், மேற்படி கட்சியே மந்திரசபையை அமைத்து அரசாங்கத்தை நடாத்தும் என்றும், இதுவரை தெரிவு செய்யப்பட்ட சுயேச்சைவாதிகளில் இருவரைவிட ஏனையோர் மிஸ்ரர் சேனநாயக்காவுடனும் ஐ. தே கட்சியுடனும் ஒத்துழைப்பர்என்றும் வற்புறுத்திக் கூறுகிறது. இன்னும் மிஸார் பண்டாரநாயக்கா அன்றுதான் ஓர்காலத்திற் பிரதம மந்திரியாகலாம் என்று கூறியதை 'ரைம்ஸ்" பத்திரிகை திரித்துப் பிரசாரம் செய்து வருகிறதென்றும், மிஸ்ரர் பண்டாரநாயக்கா இன்னும் மிஸ்ரர் சேனநாயக்காவிடம் பூரண விசுவாசம் கொண்டுள்ளார் என்றும், ஓர் சிலர் செய்யும் மித்திரபேதச் சூழ்ச்சி ஓர் போதும் வாய்க்கமாட்டாது என்றும் மேற்படி பத்திரிகை கூறுகிறது.

## ஜெய பேரிகை

ஜெய பேரிகை கொட்டடா!
கொட்டடா! கொட்டடா!

பயமெனும் பேய்தனை அடித்தோம்—துன்பப்
பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்
வியன்உல கனைத்தையும் அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம். ஜெய

இரவியின் ஒளியிடைக் குளித்தோம்—ஒளி
யின்னமுதினை உண்டு களித்தோம்
கரவினில் வந்துயிர்க் குலத்தினை அழிக்கும்
காலன் நடுநடுங்க விழித்தோம். ஜெய

காக்கை குருவி எங்கள்ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்குந் திசையெலாம நாமன்றி வேறிலை
நோக்க நோக்கக் களியாட்டம ஜெய

—பாரதியார்.

கடிதம்

## புதிய அரசியற் கட்சி

ஐயா,

தங்கள் பத்திரிகையில், இலங்கையில் ஓர் சோஷலிஸக் கட்சி தோற்றுவிக்கப்படும் என்ற செய்தியை வாசித்து மிகமகிழ்ச்சியடைந்தேன்.

இலங்கை முழுதும் அரசியல் வெள்ளம் குமுறிப் பாயும் இந்நாட்களிலும், சில மாணவரும் இளைஞரும் அரசியலிற் பங்குபற்ற விரும்பாது வீட்டுக்குள் இருந்து கவலைபுறுகின்றனர். வேறு சிலர் மனமின்றியே உள்ளவர்களில் நல்லவர்கள் என்றிருப்போரை ஆதரிக்கின்றனர். காரணம் ஓர் உண்மையான அரசியற் கட்சி இன்மையேயாகும்,

பாரத நாட்டின் அடிமை விலங்கை உடைத்தெறிந்த காங்கிரஸ் மகாசபையையே கலைத்துவிடவேண்டும்; நாட்டுக்கேற்ற சோஷலிஸக் கட்சி ஓங்கவேண்டுமென்று கங்கணம் கட்டுகின்றனர் நம் இந்தியச் சகோதரர். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் திரு. வி க., ஜயப்பிரகாஷ், கமலாதேவி போன்ருேர் வளர்க்கும் கட்சியைப் பின்பற்றி நாமும் ஏன் ஒன்றை அமைக்கக்கூடாது,

மிதவாதிகள் காலம் மலையேறுகிறது. தியாக இளைஞரே தோள்களை விரித்து நாட்டுப்பொறுப்பைஏற்கவேண்டும். இளைஞர்களது ஆதரவு இம்முயற்சிக்குக் கிட்டும் என்று நம்புகிறேன்.

ஆ. சபாரத்தினம

நாரந்தனை, 7-9-47

## ஐக்கிய மோட்டார்வள்ளச் சங்கம்

யாழ்ப்பாணம் தீவுப்பகுதி ஐக்கிய மோட்டார்வள்ளச்சங்கம் சென்ற 1931ம் வருடம் [illegible] திற்கமைய பதிவுசெய்து உண்டாக்கப்பட்டது. அக்காலத்திலிருந்து உத்தியோகம் வகித்த திரு. கம்பெல் பதிவுகாரியஸ்தரினதும் வடபகுதி உதவிப்பதிவுகாரியஸ்தர்களினதும்உதவியால்1933ம்ஆண்டு மார்கழிமீ 22ந் திகதி மோட்டர்படகுப் போக்குவரத்தைச் சங்கம் ஆரம்பித்து நடத்திவந்தது. பின்னர் 1939ம் ஆண்டில் இன்னுமோர் வள்ளம் வாங்கித் திறம்பட நடாத்தி வருகையில் 1946ம் வருடம் வடபகுதி உதவிப்பதிவுகாரியஸ்தரின் கேள்விப்படி ஊர்காவற்றுறையையும் சேர்த்து அதன் கந்தோரையும் நிறுவியுள்ளனர். சென்ற 13 வருடகாலமாக அக்கந்தோர் புங்குடுதீவிலேயே நிலவி உள்ளது. பின்னர் 1946ம் ஆண்டு மார்கழிமாசம் காரைதீவு ஆயப்போக்குவரவையும் ஏற்று நடத்தியது. ஆனல் அது நஷ்டத்தில் முடிகிறதென்று கூறி கொழும்புப் பதிவுகாரியஸ்தர் தமது அதிகாரத்தினல் சென்ற 8 9-47ல் பதிவை நீக்கிச் சங்கத்தை அழித்துவிட்டார். இஃது ஏனைய தீவுவாசிகட்கு ஓர் ஏமாற்றமும் மர்மமுமாக இருக்கின்றது.

ந. கி.

## வியாவிற் சைவபரிபாலன வித்தியாலயம்

சைவ, தமிழ் ஞானம் பெருகத் தமிழ்க் கல்லூரி நிறுவப் பரிபாலனசபை அமைப்பதற்கு பெற்ருர், பழைய மாணவர் நன்கொடையாளர் ஆசிரியர்கள் கல்வி அபிமானிகள் முதலிய அன்பர்களது மகா கூட்டம் 24-10-47 வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிவரை ஷை வித்தியாலயத்தில் நடைபெறும்
தங்களைச் சமுகந் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இ. நாகலிங்கம்
மனேஜர்

காரைநகர்
15—9—47.

Mis 131 19—9—47.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

சனி செப்டம்பர் 20

காலை 7-15 ஷீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி முத்துசாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி பஞ்சசாபகேசன் வயலின் 8-30சித்திரகானம் இசைத்தட்டு 9 முடிவு.

1 டி பஞ்சாபகேசன் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆங்கிலப் பேச்சு 2 தமிழில் செய்திகள் 2.05 சர்வ கலாசாலைக் குறிப்பு 2-15 கே கொச்சம் மணி பாட்டு 2-45 முடிவு.

மாலை 5 கே கொச்சம்மணி பாட்டு 5-40 திருமொழி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 பி முத்துசாமி பாட்டு 7-15 ராணுவத்திலிருந்து திரும்பியவர்களுக்கு செய்திகள் 7-30 தமிழில் செய்திகள 7-45 குன்னக்குடி வெங்கடராமய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 காத்திருந்தவர் நாடகம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9-45 புல்லாங்குழல், கிளாரினெட் 10 இசைவேளை 10-30 முடிவு.

ஞாயிறு செப்டேம்பர் 21

காலை 7-15 ஷீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 மாயவரம் எஸ் எஸ் வடிவாம்பாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 குரல்வகை இசைத்தட்டு 8-30 எம் எஸ் காளியமூர்த்தனன் வீணை 9 முடிவு.

12 சதம்பம் இசைத்தட்டு 12-30 அணுவும் விழிப்பும் முகப்புச்சித்திரம் 12-35 தபால்மூலம் படம்பிடித்தல் 12-45 முன்னெருநாள் கற்பனை 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் என் வெங்கடவரதன் 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 முடிவு.

மாலை 5 மாயவரம் எஸ எஸ வடிவாம்பாள் பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 எம் எஸ் காளியமர்த்தனன் வீணை 7 தமிழில் செய்திகள் 7-45 புத்தக விமர்சனம் 8 என் வி நாராயணய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 சாந்தா ஆப்தே 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 கே ஜே ஜோஸ் தில்ருபா 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

திங்கள் செப்டம்பர் 22

காலை 7-15 ஷீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 திருச்சேறை கல்யாணசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8-30 புதுக்கோட்டை என் தியாகராசன் பாட்டு 9 ஒலிபரப்பு முடிவு

1 சதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 புதுக்கோட்டை என் தியாகராசன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 புதுக்கோட்டை என் தியாகராசன்பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 திருச்சேறை கல்யாண சுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 5-42 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சிதம்பரம் ஜி அம்புஜவல்லி பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 சுயநிர்ணய சமுதாயம் 8 சிதம்பம் ஜி அம்புஜவல்லி பாட்டு 8-30 இசைச் சதம்பம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9 45 டி எஸ மரியானந்தம் பாட்டு 10 இசைவேளை 10-30 முடிவு.

செவ்வாய் செப்டம்பர் 23

காலை 7.15 ஷீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி என் விஜயராகவன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 செம்மங்குடி ஸ்ரீநிவாசய்யர் இசைத்தட்டு 8 30 பூவனூர் எஸ் சுந்தரேச மூதலியார் புல்லாங்குழல் 9 முடிவு.

1 சதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி என் விஜயராகவன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05பி என் விஜயராகவன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 பூவனூர் எஸ சுந்தரேசமுதலியார் புல்லாங்குழல் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திர கானம் இசைத்தட்டு 7-15 இலக்கிய வாசகம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 சாத்தூர் எ ஜி சுப்பிரமணியம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 வாத்ய கோஷ்டி இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ... 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.


# பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to , 1—4—48

## தந்தரோக சஞ்சீவி
## கந்தசாமி வைத்தியர்
## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வி. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30.6.48 (வெ)

## ஹிந்தி—உருது

இந்த இரண்டு மொழிகளையும் தமிழ் மொழி மூலமாகவேனும், மலையாளப் பாஷை மூலமாகவேனும் இலகுவிற் பயிலுதலாகும்,

விரும்பினோர் விபரங்களுக்குப் பின்வரும் விலாசத்திற்கு எழுதி அறிந்துகொள்ளலாகும்.

அற்லஸ் ஹால்
தபாற்பெட்டி இலக்கம் 649
கொழும்பு

Std. 18. 29-8-47

## வியாபாரத்திற்கழகு
## விளம்பரஞ் செய்தல்


# அறிவித்தல்

பின்வரும் அரசினர் தோட்டங்களிலிருந்து கீழ்க்காணும் புகையிலை வாங்க விரும்புவோர் புரட்டாசிமீ 25ந் திகதி காலமே 12 மணிக்குமுன், பேராதனை, கிருஷிக இலாகா, புகையிலை உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும்,

சிடைக்கும் இடங்களும் தொகைகளும்

| | |
|---|---|
| **பேராதனை புகையிலைப்பதநிக்கந்தோர்** | |
| சுருட்டுப் புகையிலை | |
| 1ம் வகுப்பு ஏறக்குறைய | 10 ரூ |
| 2ம் ,, | 10 ,, |
| 3ம் ,, | 10 ,, |
| **2 டம்புல்லைத் தோட்டம்** | |
| சுருட்டுப் புகையிலை | |
| 1ம் வகுப்பு | 63 ,, |
| 2ம் ,, | 79 ,, |
| 3ம் ,, | 387 ,, |
| பீடிப் ,, | 222 ,, |
| சுருட்டு (உள் இலை) | 50 ,, |
| **3 நாலந்தை மாதிரித்தோட்டம்** | |
| சுருட்டுப் புகையிலை | |
| 1ம் வகுப்பு | 22 ,, |
| 2ம் ,, | 36 ,, |
| 3ம் ,, | 20 ,, |
| பீடிப்புகையிலை | 11 ,, |
| சுருட்டு (உள் இலை) | 30 ,, |
| **4 கணவத்தை மாதிரித்தோட்டம்** | |
| சுருட்டுப் புகையிலை | |
| 1ம் வகுப்பு | 119 ,, |
| 2ம் ,, | 176 ,, |
| 3ம் ,, | 195 ,, |
| பீடிப்புகையிலை | 100 ,, |
| **5 மினிப்பை மாதிரித்தோட்டம்** | |
| பர்மா சுருட்டுப் புகையிலை | |
| 1ம் வகுப்பு | 44 ,, |
| 2ம் ,, | 24 ,, |
| 3ம் ,, | 22 ,, |
| வாஷிங்டன் | |
| 1ம் ,, | 56 ,, |
| 2ம் ,, | 52 ,, |
| 3ம் ,, | 56 ,, |
| லங்காஸ்டர் | |
| 1ம் ,, | 111 ,, |
| 2ம் ,, | 52 ,, |
| 3ம் ,, | 74 ,, |
| தட்டையன் சுருட்டுப் புகையிலை | |
| 1ம் வகுப்பு | 89 ,, |
| 2ம் ,, | 42 ,, |
| 3ம் ,, | 57 ,, |
| குறுகிய இலையன் | |
| 1ம் ,, | 147 ,, |
| 2ம் ,, | 57 ,, |
| 3ம் ,, | 39 ,, |
| ஸ்பானிய கலவன் | |
| 1ம் ,, | 86 ,, |
| 2ம் ,, | 67 ,, |
| 3ம் ,, | 97 ,, |
| தும்பராகான் | |
| 1ம் ,, | 84 ,, |
| 2ம் ,, | 57 ,, |
| 3ம் ,, | 54 ,, |
| தும்பராசெட்டி | |
| 1ம் ,, | 66 ,, |
| 2ம் ,, | 32 ,, |
| 3ம் ,, | 52 ,, |
| **6 வாரியப்போலை மாதிரித்தோட்டம்** | |
| சிகறற் புகையிலை வெக்கைப்பண்பாடு | |
| 1ம் வகுப்பு | 109 , |
| சிகறற் புகையிலை இயற்கைப் பண்பாடு | |
| 1ம் வகுப்பு | 150 ,, |
| 2ம் ,, | 250 ,, |

2 வேறு விபரங்கள் மேற்கூறிய உத்தியோகத்தரிடமிருந்து நேரில் அல்லது தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இவருடைய கந்தோரில் மேற்கூறிய புகையிலைகளின் மாதிரிகள் பார்வையிடலாம். முழுத்தொகையையும் பார்வையிட விரும்புவோர் அவ்வத் தோட்டங்களிற்றானே பார்வையிடவேண்டும்.

3 இதன்பொருட்டு விண்ணப்பித்த விலை உடன்படிக்கைகளை பேராதனை கிருஷிக அதிபர் தள்ளிவிடவும் அதிகாரமுண்டு.

பேராதனை, கிருஷிக அதிபர்,
27—8—47. இலங்கை.

G 90 12, 19—9—47.

# ஐயனர் மகத்துவம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

ணங் கொடுக்கப்பட்டுக் குதிரையிலேறிய பிரகாரம் சென்றுஒருகையிற கொண்டபடி ஐயனர் வடிவங்கள் பல அமைக்கப்பட்டிருத்தலைக் காணலாகும்.

இலங்கையிலே, விசேஷமாக வடமாகாணத்திலும் கீழ் மாகாணத்திலும் ஐயனர் கோவில்கள் இடையிடையே யுள்ளன: இந்த யாழ்ப்பாணப் பெரும் பிரிவிலே ஐயனர் கோயில் சில கிராமங்களில் உள்ளனவெனினும், ஆகம விதிப்படி கோயிலமைத்துப் பிரதிஷ்டை செய்து நித்திய நைமித்திகங்கள் நடைபெறும் கோயில்கள் அரிதெனலாம். சில கிராமங்களில் பெருமரங்கள் செறிந்த ஸ்தானத்திலே கொட்டில் போன்ற ஒரு கோயில் அமைத்து, அதன்கண்ணே விக்கிரகம் அமைத்தலின்றி, ஒருசிலையைநாட்டி ஐயனாராகப் பூசித்து வழிபடக்காணலாம்; சில கிராமங்களில் பெருமரத்தின் கீழே ஒரு சிலையை நாட்டி ஐயனரென்று பூசித்தலையுங் காணலாம்; சிற்சில கிராமங்களில் ஐயனருக்குத் தூபியோடு கூடிய கோயில் அமைத்து அதிலும்விக்கிரகமின்றிச் சிலையை மாத்திரம் தாபித்துப் பூசிக்கக் கண்டுள்ளோம்; காரைநகரிலே ஐயனர் கோவில் என வழங்கும் ஸ்தானத்தில் இப்பொழுது ஒருசிறியஐயனர்கோயிலும் பெரிய சிவாலயமும் உள்ளன; சுன்னகம் என்னும் ஊரில் ஒரு ஐயனர் கோயில் உண்டு. அக் கோயிலில் உற்சவமும் வருடந்தோறும் நடைபெறும்; ஆனல் அக்கோயில் நித்திய நைமித்திகங்கள் ஆகம விதிப்படி செய்யப்படுவ தில்லை யெனவும், பிராமணரல்லாத பூசாரிமாரே அங்கே பூசை செய்வோர்க ளெனவும், ஆண்டுதோறும் திருவிழா இறுதியிலே நூற்றுக் கணக்கான ஆடு கோழிகள் அங்குவெட்டப்படுகின்றனவெனவும் அறியலானேம்; ஐயனரைப்பாமரமக்கள் "சில்லறை" தெய்வங்களுளொன்றாகமதித்தே இங்ஙனம் ஆடு கோழி முதலியவற்றைப்பலியிடுகின்றனர்ஐயனர் சிவாஞ்ஞையினல்உயிர்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும் ஆற்றல் பெற்றவரென்பதும், தேவர்களும் முனிவர்களும் அரிகர புத்திரனைப் பூசித்து வணங்குவரென்பதும்

"புவன மீந்து புவனத் திறையேன
அவனை நல்கி யமரநும் மாதவர்
எவநும் ஏத்திடும் ஏற்றமும் நல்கினன்
சிவன தின்னருள் சேப்புதற் பாலதே"

எனவருங் கந்தபுராணத் திருவிருத்தத்தால் உணரத்தகும்.

—வரும்

## ஓறியன்றல் கவுண்மேந்து சிக்கியுறிற்றி லைவ் அஸ்யூறன்ஸ் கொம்பனி லிமிற்றெட்

யாழ்ப்பாணப்பகுதி திரு. வ. துரையப்பா அவர்களின் வீமா தீர்ந்த பத்திரம் இலக்கம் (1012178 Policy No 1012178) காணமற்போய்விட்ட தென்பதை இத்தால் அறியப்படுத்துகிறோம்.

இணைப்பிரதி கொடுப்பதற்குத் தடையிருப்பின், இத்தேதி தொடக்கம் ஒரு மாத எல்லைக்குள் எங்களிடம் அறிவிக்க வேண்டும்.

(ஒப்பம்) எல். எஸ். வயித்தியனுதன்
மனேசர்
பம்பாய், 13—9—47.
Mis 130 19

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் காரைநகர் பஸ்சேவிசுக்கு டிறைவர்மார், கொன்டக்ரர்மார் தேவைப்படுகிறது.

இந்துசாதனம் மூலமாக மனுப்பண்ணவும் மனுப்பத்திரங்களின் முடிவுத் திகதி 25—9—47.

Mis 133 19, 23—9—47.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் முடிவு

# ஸ்ரீ கனகரத்தினம் வெற்றி

## எதிரிகள் கட்டுப்பணம் இழந்தனர்

சென்றவாரம் தொடக்கம் இதுவரையும் நிகழ்ந்த தேர்தலில் மேலும் இரு தமிழ்க் காங்கிரஸ் வாதிகளும், காங்கிரஸ் அநுதாபியான ஓர் சுயேச்சை வாதியும் வெற்றி பெற்றுள்ளனர். அவர்கள் பின் வருவோராவர்:

காங்கேசன்துறைத் தொகுதியில் தமிழ்க் காங்கிரஸ்வாதி திரு. எஸ். ஜே வி செல்வநாயகம் தம்முடன் எதிரிடையிட்ட திரு பீ. நாகலிங்கம் (சமசமாஜி) திரு. சு. நடேசன் (ஐ தே.க.) என்னும் இருவரையும் 6962 வாக்குக்களால் வெற்றிபெற்றுர்.

மன்னூர்த் தொகுதியில் தமிழ்க்காங்கிரசுடன் அநுதாபம் கொண்டுள்ள திரு, ஸி. சிற்றம்பலம் திரு.ஜே.தியாகராஜா (ஐ. தே. க.) திரு. எஸ. வி. ராசுப்பிள்ளை (சுயேச்சை) என்னும் இருவரையும் 2496 வாக்குக்களால் வெற்றிகொண்டார்.

மத்துகமத் தேர்தலில்கல்விமந்திரி மிஸ்ரர் கன்னங்கராவும்பாணந்துறையில் அரசாங்கசபை உப தலைவராயிருந்த மிஸ்ரர் சுஸந்தா டி. பொன்சேக்காவும் தோற்கடிக்கப்பட்டனர். இவர்களிருவரும் ஐ தே. கட்சியைச் சேர்ந்தவராவர்.

இலங்கை இந்தியக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ சௌமியமூர்த்தித் தொண்டைமான் நுவரெலியாவில் வெற்றி கொண்டார். இ. இ. காங்கிரசால் இதுவரை நியமிக்கப்பட்ட அபேட்சகர் அனைவரும் வெற்றி பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ப்பாறிய ஸ்ரீ க. கனகரத்தினம் (தமிழ்க் காங்கிரஸ) நேற்று நடந்த வட்டுக்கோட்டைத் தொகுதித் தேர்தலில், தம்முடன் எதிரிடையிட்ட 5 அபேட்சகரைத் தோற்கடித்து 9487 வாக்குக்களால் வெற்றிகொண்டார் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| ஸ்ரீ க கனகரத்தினம் | 11721 |
| ,, வி. வீரசிங்கம் | 2234 |
| ,, எஸ். எச். பேரின்பநாயகம் | 1716 |
| ,, எஸ். பரமநாயகம் | 1546 |
| ,, கா. சண்முகம் | 1100 |
| ,, பொ. ரகுபதி | 827 |
| பழுதானவை | 274 |
| வெற்றிபடைந்தாரின் அதிக வாக்கு | 9487 |

ஸ்ரீ கனகரத்தினத்துடன் போட்டியிட்டவர்கள் அனைவரும் கட்டுப்பணத்தையிழந்தனர்.

ஸ்ரீ கனகரத்தினத்தின் வெற்றியுடன் தமிழ்க் காங்கிரஸ் எல்லாமாக 7 ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறது. தமிழ்க் காங்கிரசின் சார்பாகப் போட்டியிட்டவர்கள் 9 பேர் மாத்திரமே.


### ஸ்ரீ நடேச ஐயர் கட்டுப் பணம் இழந்தார்

மஸ்கேலியாவில் நிகழ்ந்த தேர்தலில் இலங்கை இந்தியக் காங்கிரஸ் சார்பாக நின்ற ஸ்ரீ ஜி. ஆர். மேத்தா வெற்றிபெற்றுர். அவருடன்போட்டியிட்ட ஸ்ரீமான்கள நடேச ஐயர், ரீ. எம். சொலமன் என்பவர்கள் கட்டுப் பணம் இழந்தனர்;

கற்குடாவில் திரு.ரீ.நல்லையா மீண்டும் தெரிந்தெடுக்கப்பட்டார்.

இப்போது இலங்கைப் பாராளுமன்றத்துக் கட்சிநிலை வருமாறு:

| | |
|---|---|
| ஐ. தே. கட்சி | 33 |
| சமசமாஜிகள் | 9 |
| போல்ஷெவிக் லெனின்கட்சி | 4 |
| தமிழ்க் காங்கிரஸ் | 7 |
| இந்தியக் காங்கிரஸ் | 5 |
| சமதர்மிகள் | 2 |
| சுயேச்சை வாதிகள் | 14 |



ஸ்ரீ கனகரத்தினத்தின் வெற்றி

இலங்கையரசாங்கத்தில் கணக்குப் பரிசோதனை யதிகாரியாயிருந்து இளை

### கால நிலை

சென்ற இரவும் முந்தைநாளும் இங்கே இடையிடையே மழை பெய்தது; இப்பொழுதும் மழைக் கோலங் காணப்படுகிறது. வயல்கள்விதைக்கப்படுகின்றன.

### தேகவியோகம்

திரு. வி. சின்னையா உபாத்தியாயர் அவர்கள்

வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் பலவருடங்களாக ஓர் உபாத்தியாயராகத் திறமையோடு கடமையாற்றிவந்த வண்-கிழக்கு கந்தர் மடம் ஸ்ரீ வி. சின்னையா உபாத்தியாயர் அவர்கள் ஆவணிமீ 30ந்உ திங்கட்கிழமை இரவு 10½ மணியளவில் தேகவியோகமாயினர் இவர் 1918ம் ஆண்டில் கரம்பன் சண்முகநாத வித்தியாசாலை வளர்ச்சியின் நிமித்தம் கௌரவ உபாத்தியாயராகக் கடமையாற்றியவர். 1920ம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஞாயிற்றுக்கிழமைதோறும் சமயப்பிரசங்கமுஞ் செய்து வந்தவர். இவ்வுபாத்தியாயர் நைஷ்டிகப் பிரமசாரியாய், நேர்மை சமயசாத்திர ஆராய்ச்சிசொல்லாற்றல்தெய்வவழிபாடு முதலியவற்றிற் சிறந்தவராய் சமயத் தொண்டில் ஈடுபட்டவராய்தூய முறையில் வாழ்ந்தவர். கந்தர்மடம் சிவகுருநாதபீடம் ஸ்ரீமத் கனகரத்தினசுவாமிகளின் சிஷ்யர்களில் ஒருவர். இறக்கும்போது வயசு 56 ஆகும். இவரின் பிரிவு சைவத்தொண்டிற்குப் பெரும் இடையூறு எனலாம். இவர் ஆன்மா சாந்தி அடைவதாக.

### தானவரவு

மேற்படி உபாத்தியாயரவர்களின்ஏகாக்கிரியைப்போது திருக்கோணமலையில் உதவிச் சிறப்பராயிருப்பவரும், உபாத்தியாயரவர்களுக்கு மகன்முறை பூண்டவருமாகிய திரு. தா. மெய்ஞ்ஞானசுந்தரமவர்கள்யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பியரூபா 5 பெற்றும்.

## பாகிஸ்தான் பூச்சாண்டி!

### மகமத் ஸபாருல்லா இந்தியாவை வெருட்டுகிருர்

ஐக்கியதேச ஸ்தாபனத்தில் பாகிஸ்தான் பிரதிநிதி ஒருவர் இந்தியாவிலே முஸ்லீம்கள் கொடுமையாக நடத்தப்படுவதுபற்றி, மேறபடி ஸ்தாபனத்தில் முறைப்பாடு செய்யப்படலாம் என்று கூறினர். அவருடன் பாகிஸ்தான் பிரதிநிதிகள் கோஷ்டிக்குத் தலைவராகச் செல்லும் சேர். மகமத் ஸ்பாருல்லாகானும் இதே பல்லவியைப் பாடுகிருர். இந்தியாவிலே முஸ்லீம்கள் வதைத்துக் கொல்லப்படுகின்றனர் என்றும், அந்தக்கொலைகள் சீக்கிரமே ஒழியாவிட்டால், பாகிஸ்தான் இவ்விஷயமாக ஐக்கியதேச ஸ்தாபனத்தில் முறைப்பாடு கொடுக்கும் என்றும், அதிலும் வாய்க்காவிட்டால் தன் மக்கள் பாதுகாப்புக்காக, பாகிஸ்தான் எதிர் நடைவடிக்கையை கண்டிப்பாக எடுக்கும் என்று கூறினர்.

இந்தியாவிலே, முன்னேற்பாட்டின்படி முஸ்லீம்கள் வதைக்கப்படுகின்றனர். சென்ற ஓர்மாத காலமாக டெல்கி, கிழக்குப் பாஞ்சாலம், மேற்குப் பாஞ்சாலம் என்னும் இடங்களிலே முஸ்லீம்கள், சீக்கியர்-ஹிந்துக்களாற் கொலை செய்யப்படுவதை இந்திய அரசாங்கம் கண்டும் காணுதது போல நடிக்கிறது என்று சேர். ஸபாருல்லா கூறுகிருர்.

## உலகம்பலவிதக் கதை

2 ம் பக்கத் தொடர்ச்சி

பொழுது உயர்ந்த உத்தியோகம் வகித்திருக்கிறேன்; முன்னரைக் காட்டிலும் அதிகமான வேதனம் பெற்று வருகிறேன்; மேலதிகாரிகளும் என்னிடத்தில் அன்பு பாராட்டி என்னை ஆதரித்து வருகிருர்கள்; எனக்கு வேறு எவ்வகையான கவலையுமில்லை தாயே, என் அருமைத் தங்கைச்சியையும் அன்பான மைத்துனரையும் இட்டுத்தான் அம்மா, அல்லும் பகலுங் கவலை; நானும் அவரைத் தேடக்கூடிய இடமெல்லாந் தேடிப் பார்த்தேன்; அகப்பட்டிலர்; என் நண்பர்களாயுள்ளார் பலருக்குப் பலமுறை கடிதங்கள் எழுதி விசாரித்தேன்; இப்பொழுதுங் கடிதங்கள் எழுதியிருக்கின்றேன்; ஆனுலும், இற்றைவரையில் எவரேனும் எனக்கு என் மைத்துனரையிட்டு ஒரு சந்தோஷமான பதிலை எழுதினுரல்லர்; ஆனுல் நான் இன்னமும் என் மைத்துனர் வாழ்க்கையிற் சந்தேகப்படவில்லை; அவரைத் தேடும் முயற்சியையுங் கைவிடவில்லை; அதற்கு ஒரு முற்றுமில்லாமலிருக்க, எங்கள் தங்கைச்சியின் விவாக விஷயமாக வேறு முயற்சிகளைச் செய்வதும் புத்தியல்ல, அம்மா," என்று இப்படித் தாய்க்குப் பதில் சொல்லும்போது சிவகுருநாதன் தன் தங்கையின் முகத்தைப் பார்த்தான், அவள் தன் முன்றனையால் தன்னுடைய கண்களை ஒற்றக் கண்டு, மனம் பதைத்து "என் அருமைத் தங்காய், நீ ஏன் அம்மா கவலைப்படுகிருய், உனக்கு எவ்வகையான துன்பமும்நேர ஆண்டவன் விடமாட்டான; தங்கைச்சி, நீ ஊரிலிருந்து கவலைப்படுகிருயென்பதையுணர்ந்தே நான் அம்மாவோடு உன்னை இங்கு வரும்படி கடிதமெழுதினேன்; சஞ்சலம் வேண்டாம், தங்காய்" என்று தேற்றினுன்.

"அன்புடையார் பிரிவு துன்பந் தருவது"

விஜயரத்தினமும்சிவகுருநாதனும் நண்பராயினர்; விஜயரத்தினத்திடம் ஏதும் தவறுன கொள்கைகளிருந்தால், அவைகளெல்லாம் சிவகுருநாதனுடன் சிலகாலம் ஊடாடியமையினுல் நீங்கிவிட்டனவெனலாம்; இதனுலல்லவா "நல்லாரோ டிணங்கியிருப்பதுவும் நன்று"என முன்னேர்பாடியுள்ளனர்; பத்து நாள்வரை விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் சிவகுருநாதனுடைய வாசஸ்தானத்திற்றுனே சகல சௌகரியங்களோடும் இருந்தனர்; பின்னர் விஜயரத்தினம் தான் முந்தி உத்தியோகம் பார்த்த இடமாகிய கோலாலம்பூருக்குப் போய்த்தனக்கு உத்தியோகத்திற்காகிய ஒழுங்கினைச் செய்துகொண்டு தானும் மனைவியும் அங்கே வசிப்பதற்காகிய ஒரு வீடும் ஒழுங்குபண்ணிக்கொண்டு வருவதாகச் சொல்லித் தன் மனைவியிடத்தும் சிவகுருநாதன் தாய் முதலியோரிடத்தும் அநுமதி பெற்றுக்கொண்டு புறப்பட்டான்; புறப்படும்போது சிவகுருநாதன் தங்கள் மைத்துனனுகிய நமசிவாயத்தின் வரலாற்றையும்குணங்குறிகளையும் விஜயரத்தினத்திற்கு எடுத்துச் சொல்லி அவனைப்பற்றி ஏதும் அறிந்தால் உடனே தங்களுக்குத் தெரிவிக்கும்படியும்சொன்னுன். அப்படியே செய்வதாகக் கூறி விஜயரத்தினம் பயணம்போனுன்; போன விஜயரத்தினம் அவ்வூரில் தன்னுடைய நண்பர்களின் உதவியினுலும் பழைய அதிகாரிகளின் சகாயத்தினுலும் ஒரு தக்க உத்தியோகத்தைப் பெற்றுன்; தானும் தன்மனைவியும் போயிருத்தற்காகிய நல்ல ஒரு இல்லத்தையும் ஒழுங்கு செய்துகொண்டு ஒரு வாரத்துள் மீண்டு சிவகுருநாதன் முதலியோர் இருங்குமிடத்தையடைந்தான்; சென்ற கருமமெல்லாம் அநுகூலமாயின என்று விஜயரத்தினஞ் சொல்லக் கேட்ட பாக்கியலட்சுமியும் சிவகுருநாதன் முதலாயினேரும் மகிழ்ச்சியடைந்தனர்; பாக்கியலட்சுமி இச்செய்தியை உடனே சிவபாக்கியத்திற்குத் தெரிவிக்க, அவள் "தங்காய், பாக்கியலட்சுமி உடனிருக்கும்போது, கணவனுக்குச் சகலபாக்கியங்களும்கைகூடுந்தானே" என்று சொல்லிப்புன்னகைசெய்தாள்; "அக்கா, ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்; எல்லாநன்மையும் நீங்கள் என்மீது வைத்த அன்பினுல் வந்துசேர்ந்தன" என்றுஇனிதுபதில்சொன்னுள்; விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் கோலாலம்பூருக்குப் புறப்படுதற்காகிய தினம் வந்தது; அன்புடையார் பிரிவு துன்பந்தருவ தென்பர்: பாக்கியலட்சுமி தங்களைவிட்டுப் பிரியப்போகிறுளே யென்பதை யிட்டுச் சிவபாக்கியங் கலக்கினுள்: சிவபாக்கியம் முதலானேரைப் பிரிய நேர்ந்ததே யென்பதை யெண்ணிப் பாக்கியலட்சுமி சஞ்சலப்பட்டாள்; இவர்கள் இருவருங் கலங்கிக்கொண்டு நிற்கும்போது கண்ணகியம்மை அவர்கள் நிலையைக் கண்டாள்; "மகளே, எங்கள் சின்னத்தங்கைச்சியைப் பிரிவது எனக்குங் கவலைதான்; ஆனுலும் சின்னத்தங்கைச்சி தன் நாயகனேடிருந்து வாழ்வதற்குத்தானே புறப்படுகிருள்; அல்லாமலும் அதிக தூரமான ஊருக்குப் போகவில்லை, நினைத்தவுடனே நாங்களும் அங்கே போய் இவர்களைக் காணலாம்; அப்படியே இவர்களும் இங்கேவந்து எங்களைக் காணலாம்; சின்னத்தங்கைச்சியுங் கணவனும் இப்போதைக்கு எங்களைப் பிரிந்துபோனுலும், அவர்களை நாங்களும் எங்களை அவர்களும் எந்தநேரமேனும் மறக்கமுடியுமா கவலைப்படவேண்டாம்" என்று சொல்லி இருவரையுந் தேற்ற, அவர்கள் ஒருவாறு தேறினர்; பின்னர் தம்பதிகளிருவரையும் பயணமனுப்பும்போது, சிவகுருநாதன் இராமனையும் அவர்களுக்குத் துணையாகப்போய்ச் சிலநாள் அங்கே தங்கிநின்று மீண்டு வரும்படி சொலல, அவனும் அவர்களுடன் சென்றுன்: விஜயரத்தினமும் பாக்கியலட்சுமியும் இராமனேடு சுகமே தங்கள் வாசஸ்தானத்தைச் சேர்ந்தவுடன், சிவகுருநாதன் முதலியோருக்குத் தாம் போய்ச் சேர்ந்த செய்தியைத் தந்திமூலமாகத் தெரிவித்தான்; செய்தி கிடைத்து இவர்களும் மகிழ்ந்தார்கள்; விஜயரத்தினம் தன் உத்தியோகக் கடமையைத் திறமையுடனே பார்த்துக்கொண்டு, அந்த உத்தியோகத்தானத்திற்குச் சமீபமாகவுள்ள தன்னில்லத்திலே, கொண்டான் குறிப்பறிந்தொழுகுஞ் சிறந்த இல்லாளாகிய பாக்கியலட்சுமியுடன் இனிது வாழ்வாயினுன்.

(வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்
முல்லைத்தீவு, குமாரபுரம்
ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோவில்

## திருப்பணி விஞ்ஞாபனம்

இச் சுப்பிரமணியதலத்தின் தோன்மை, மகிமை என்னும் இவைகளைப் பற்றிச் சைவ மக்கள் பலர் அறிவர், சைவாபிமானிகள் காலந் தோறும் உதவிவரும் தருமப்பொருளைக் கொண்டே இத் திருக் கோவிலின் திருப்பணி நிறைவேறி வருகின்றது.

இப்பொழுதும் இத்திருக்கோவிலிலுள்ள விநாயகர் ஆலயத்தின் எஞ்சிய திருப்பணி திருமஞ்சனக் கிணறு ஸ்தம்பமண்டபம், மகாமண்ட பத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்குக் கதவுகள்அமைத்தல், இரண்டுமண்டபங்களுக்கும் நிலத்திற்கு சீமன் கோங்கிறிற் இடுதல், வாகனசாலை களஞ்சியம் சுற்றுமதில் என்னும் இவைகளைச் செய்து நிறைவேற்றவேண்டி யிருப்பதால் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி, மேற்படி திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" போம்பொழு [தருந்துணை புரிந்த புண்ணியம் "


இங்ஙனம்,

குமாரபுரத் திருப்பணித் தொண்டன்,
கு. பரமசாமிக் குருக்கள்.

Std 26—1-7-47 30-9-47

---

## உங்கள் சங்கீதக் கருவிகள் பழுதடைந்து விட்டனவா?



அப்படியானல் உடனே எம்மிடம் கொண்டுவாருங்கள்
3 வருட உத்தரவாதத்துடன் புத்தம்புதிதாய்
பழுதுபார்த்துத் தருகிறோம்

[ எவ்வித நிலைமையில் உள்ளதாயினும் சரி கட்டணம் வெகு சகாயம் ]

கல்கற்றுமோகன்புளுட் ஹார்மோனியக் கம்பெனி,
சிவலிங்கப்புளியடி, *484, K. K. S.* றேட், யாழ்ப்பாணம்.

Std 34 12—9—47 To 9—12—47.

---

விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை

---

மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

## கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினுங் செல்ல டெக் ரிக்கற் ரூபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கோள்ளலாம்

வேறு செலவு உங்களுக்கு இல்லை

பல நூற்றுக்கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்
எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ
லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, காங்கேசன்துறைரேட்,
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

Std 33 2—9—47—28-2-48

---

## இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

### இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.

லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கினேஸ வங்கி.

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242,ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்,
வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

( Std 29 1-8—30-7-48) (F)

---

## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாண மிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:
எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6 6-48

---

## விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையானநிறமுடைய முரசு பொன்ற முரசோடு கூடியன; சராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனல் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன: எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உபயோகித்தாற்ருன் இந்த உண்மைகள் உங்ளுக்குப் புலப்படும்.

பத்திராணு மாளிகை
[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11-7—10-10-47.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna. on Friday, September 19, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org